**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண். 146/2021**

**21.08.2024**

**வா.சா. 1 அன்பு**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

பாட்டனார் கரியனுக்கு பூர்வீகம் பில்லாந்தி. கரியனுக்கு உடன்பிறந்தது வெள்ளை, தங்கவேல், சுப்பராயன் ஆகியோர், தவிர பேர் தெரியாத மற்றொரு சகோதரர் சிறு வயதிலேயே இறந்துவிட்டார். கரியனின் அப்பா பெயர் முத்து. பாகப்பிரிவினைக்கு முன்பு மேற்படி முத்துவுக்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் தெரியாது. கரியனுக்கு பாகப்பிரிவினையில் சர்வே எண் 108/4பி, சர்வே எண் 20/12பி சர்வே எண் 22ல் தற்போது உட்பிரிவு ஞாபகம் இல்லை, சர்வே எண் 20/11ல் உள்ள கிணற்றில் பாகம் என 1.91 ஏர்ஸ் பாத்தியப்பட்டது. இது வழக்கிற்கான பொய் என்றால் சரியல்ல. கரியனுக்கு வீடு, சர்வே எண் 20/4, சர்வே எண் 20/5, சர்வே எண் 20/3, சர்வே எண் 20/6, 20/7, 20/8, மற்றும் கிணறு ஆகியவை மட்டுமே பாகம் கிடைத்தது என்றால் சரியல்ல. வாதசாஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் மேற்படி நிலங்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளவை என்றால் சரியல்ல. வாதசாஆ.2 உயிலில் கரியன் தனக்கு பாகமாக கிடைத்த மேற்படி 1.91 ஏர்சை வாதிக்கு எழுதி வைத்துள்ளார். உயிலின் சொத்து விவரங்கள் சர்வே எண், ஜக்பந்தி ஆகியவை தெரியாமல் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மொத்த விஸ்தீரணம் 1.91 ஏர்ஸ் என்று மட்டுமே எனக்கு தெரியும் என்றாலும் அது எந்த எந்த சர்வே எண்ணில் எவ்வளவு நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றாலும் அனைத்து சர்வே எண்ணும் தெரியாது, குறிப்பிட்ட சர்வே எண்கள் மட்டும் தெரியும். தாவா சொத்து விவரமோ அதில் கால்வாய் எங்குள்ளது என்ற விவரமோ எதுவும் தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண் 116/3ல் உள்ள 7 செண்டில் உள்ள கிணறு, சர்வே எண் 20/11ல் உள்ள கிணறு, சர்வே எண் 22/7ஏல் உள்ள கிணறு ஆகியவற்றில் உள்ள கால்வாய் உட்பட கிணறுகள் பொதுவாகத்தான் அனுபவித்து வரப்பட்டன என்றால் சரிதான். மேற்படி கிணறுகளில் யார், யார் கூட்டாக அனுபவித்தார்கள் என்றால் சர்வே எண் 116/3ல் கிணற்றை பொன்னம்பலம், ராமகிருஷ்ணன், சின்னசாமி, வாதி ஆகியோரும் சர்வே எண் 20/11ல் உள்ள கிணற்றை வாதி, கண்ணன் ஆகியோரும் சர்வே எண் 22/7ஏல் உள்ள கிணற்றை வாதியும், ஜெயச்சந்திரனும் கூட்டாக அனுபவித்தார்கள். உயில் எழுதிய காலத்தில் சர்வே எண் 20/11ல் உள்ள கிணற்றுக்கு மின் இணைப்பு இருந்ததா என்றால் தெரியாது. உயில் காலத்தில் மேற்படி கிணற்றில் துலா மூலம் நீர் இறைத்தார்கள் என்றால் உயில் எழுதுவதற்கு முன்புதான் துலா மூலம் இறைத்தார்கள், உயில் எழுதியபோது அப்பா மோட்டார் மூலம் இறைத்தார். சர்வே எண் 20/12பி, சர்வே எண் 20/9 ஆகியவை பக்கத்து பக்கத்து நில்ங்கள் என்றாலும் அவற்றில் பொது கால்வாய் இருந்தது என்றாலும் சரிதான். தற்போது மேற்படி பொது கால்வாய் இல்லை என்றால் சரிதான். மேற்படி கால்வாயின் நீள, அகலம் தெரியுமா என்றால் நான் பார்க்கவில்லை. வாதிக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லை. தற்போது வரை வாதிதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருந்தால் வாதி உயில் எழுதப்பட்ட உடனேயே ஆக்கிரமிப்பை நீக்க உடனடியாக வழக்கு தாக்கல் செய்திருப்பார்

என்றால் உயில் எழுதப்பட்டபோது சர்வே செய்யப்படாமல் இருந்ததுதான் காரணம். வாதிக்கும் பிரதிவாதிக்கும் முன் விரோதம் இருந்ததா என்றால் இல்லை. கூட்டுக்கிணற்றில் பிரதிவாதி எங்களுக்கு முன்பே மின் இணைப்பு பெற்று எங்களை விட அதிகமாக பயிரிட்டு வருவதால் முன் விரோதம் கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி, வாதி அல்லது அவர் குடும்பத்தின் மீது நீர் இறைப்பது சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. பிரதிவாதி மற்றும் கண்ணன் மீது வாதிதான் போலிசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் சாந்தப்பன் மற்றும் சந்தானம் மீது நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் பிரதிவாதிகள் எங்கள் நிலத்தை ஆக்கிரமித்து விட்டதாக நாங்கள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா ஏ செட்யுல் சொத்தை வாதிதான் தற்போதும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அவ்வாறு நான் சொல்வது தவறு என்றாலும் அதை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றாலும் கூட்டுக்குடும்பமாக நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் அனுபவிக்கிறோம். கூட்டுக்குடும்பமாக அனுபவித்து வந்தால் வாதி மட்டும் தனியாக வழக்கு தாக்கல் செய்திருக்கமுடியாது என்றாலும் அதன் காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எங்கள் கிராமத்தை சேர்ந்த நாகப்பனை தெரியுமா என்றால் தெரியாது, உயிலில் கையெழுத்திட்டுள்ளார். எங்கள் ஊரை சேர்ந்த மேற்படி நாகப்பனை நான் தெரிந்துகொண்டே தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியின் சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் நாங்கள்தான் நிலத்தை அபகரிக்கவேண்டி பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.